## இளைஞர் அணி மாநாட்டிற்காக

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் ரூ.51 லட்சம் நிதி!

## இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் வழங்கினர்!



கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. ஆகியோர் முன்னிலையில் இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், இளைஞர் அணி மாநாட்டிற்காக, அணியின் துணை செயலாளர்களான எஸ்.ஜோயல், இன்பா என்கிற ரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன், க.பிரபு, ஜி.பி.ராஜா, சி.ஆனந்த் குமார் ஆகியோர் ரூ.51 லட்சம் நிதி அளித்தனர்.



கிருஷ்ணகிரி பட்டாசு சில்லறை விற்பனை கடை வெடி விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்பத்தாருக்கு தலா 3 லட்சம் ரூபாய் காசோலையை உணவு மற்றும் உணவு பாதுகாப்புத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கி ஆறுதல் கூறினார்.

## குஜராத் மருத்துவமனையில்

# தீ விபத்து!

காந்திநகர், ஜூலை 31-

குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் சஹிபக் பகுதியில் தனியார் தொண்டு நிறுவனத்திற்கு சொந்தமான மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்த மருத்துவமனையின் 2வது தளத்தில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## கிருஷ்ணகிரி பட்டாசு சில்லறை விற்பனைக் கடையில் வெடி விபத்து!

# பலியான 9 பேரின் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிதி உதவி!

## அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

கிருஷ்ணகிரி, ஜூலை 31 -

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கிருஷ்ணகிரி நகராட்சி, பழையபேட்டை, நேதாஜி ரோடு, போகனப்பள்ளியில் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு சில்லரை விற்பனை கடை வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கும், காயமடைந்து மருத்துவச்சிகிச்சை பெற்று வருபவர்களை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேற்று முன்தினம்(29.07.2023) நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் உடனிருந்தனர்.

பின்னர் விபத்து நடந்த பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:-

கிருஷ்ணகிரி நகராட்சி, பழையபேட்டை, நேதாஜி ரோடு, போகனப்பள்ளியில் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு சில்லரை விற்பனை கடையில் 29.07.2023 அன்று காலை எதிர்பாராத விதமாக வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். காயமடைந்த 12 நபர்களுக்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு, தற்போது அவர்களின் நிலைமை சீராக உள்ளது.

இந்த துயரச் செய்தியினை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு துரிதப்படுத்த ஆணையிட்டுள்ளார். மேலும், இவ்விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுக்குச் சிறப்பு சிகி ச்சையும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்ததோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா ரூ.3 இலட்சமும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு ரூ.1 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனைத்தொடர்ந்து, இவ்விபத்தில் உயிரிழந்த ரவி, திருமதி.ரித்திகா, செல்வன்.ருத்தீஷ், இம்ரான், இப்ராஹிம் கலீலுல்லா, திருமதி.ராஜேஸ்வரி, சிவராஜ் ஆகிய 7 பேர் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சேலம், தருமபுரி மாவட்டத்திலிருந்து கூடுதலாக மருத்துவர்களைக் கொண்டு சிறப்பான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விபத்து குறித்த காரணங்களை தருமபுரி தடவியல் நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். அதற்கான விவரம் பிறகு தெரிவிக்கப்படும் என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்அர.சக்கரபாணி தெரிவித்தார்.

அப்போது மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் முருகன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம். வெங்கடேசன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம், கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் நவாப், ஒன்றியச் செயலாளர்கள் கோவிந்தன், ரகுநாத் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.


